4. அரசினர் தீர்மானங்கள்.

(அ). விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கப்பன் இடத்தில் இல்லை. ஆதலால் அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை? அடுத்து, திரு. வி. கே கோதண்டராமன் அவர்களுடைய தீர்மானம்.

(அ) வேலூர் மத்தியச் சிறையில் கைதிகள் மஞ்சள் காமாலை வயிற்றுக் கடுப்பு முதலிய தொத்து நோய்களால் பீடிக்கப் பட்டது குறித்தும், உடனடி நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

'வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர் மத்திய சிறையில் உள்ள கைதிகள் மஞ்சள் காமாலை, வயிற்றுக் கடுப்பு முதலிய தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுவதால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது'.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, வேலூர் மத்தியச் சிறையில் உள்ள கைதிகள் அண்மையில் குடற் காய்ச்சலினாலும் பின்னர் மஞ்சள் காமாலை நோயினாலும் பீடிக்கப்பட்டனர்.

இந்தக் குடற் காய்ச்சல் நோய் 28—7—1969 அன்று முதன் முதலாக ஒருவருக்கு ஏற்பட்டது. இந்நோயாளி சிகிச்சைக்காக வேலூர், அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு உடனடியாக மாற்றப்பட்டார். பின்னர், மேலும் சிலருக்கு இந்த நோய் ஏற்பட்டது. மொத்தத்தில் அறுபத்தி நான்கு பேர்கள் நோயுற்றனர். இவர்களில் இருபத்தி நான்கு நோயாளிகள் அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சிய நோயாளிகள் சிறை மருத்துவ மனையிலேயே சிகிச்சை பெற்றனர். பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், இரண்டு கைதிகள் 8–8–1969 தேதியன்று இறந்து விட்டனர்; மற்றொரு கைதி 11–8–1969 தேதி அன்றும், நான்காவது கைதி 18–8–1969 தேதியன்றும் இறந்தனர்.